பக்கங்கள்:-20

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 26 | வெள்ளிக்கிழமை | 09.02.2024 | அதிர்வு 192 |
|---|---|---|---|---|---|

## அயோத்தி இராமர் கோயிலில் நாமல் இன்று வழிபாடு!



ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, 06



### தமிழ்த் தேசிய பிரச்சினையே பொருளாதார நெருக்கடியின் அத்திவாரம்


# அரசியல் தீர்வு குறித்து வாயே திறக்காத ரணில்

## கொள்கை விளக்க உரையை அடியோடு நிராகரித்த சுமந்திரன்

(ந.லோகதயாளன்)

“தமிழ்த் தேசியப் பிரச்சினையே நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் அத்திவாரமாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கை விளக்க உரையில் நாட்டின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவரின் கொள்கை விளக்க உரையை நாங்கள் முற்று முழுதாக நிராகரிக்கின்றோம்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 06



# மோ. சைக்கிளில் சென்ற நபர் மீது துப்பாக்கிச்சூடு

### இரத்தக் காயங்களுடன் மூன்று கிலோ மீற்றர் தூரம் வரை பயணம் செய்து மயங்கி வீழ்ந்தார்



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம், ஆனமடுவ, தட்டேவ பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ள நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் 06




கடந்த மாத இறுதியில் இடைநிறுத்தப்பட்ட நாடாளுமன்றத்தின் புதிய அமர்வை நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து வைத்து, தமது அரசின் கொள்கை விளக்கம் பற்றிய கருத்துக்களை அக்கிராசனப் பேச்சை – சிம்மாசன உரையை – நிகழ்த்தி இருக்கின்றார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒன்றரை வருடங்களுக்குள் இப்படி நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் உயர் 06



# எல்லை தாண்டி மீன்பிடித்த 19 இந்திய மீனவர்கள் கைது

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் இரண்டு படகுகளில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 19 இந்திய மீனவர்கள் கடற் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து நேற்று அதிகாலை கைது செய்யப்பட்ட 19 இந்திய மீனவர்களும காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் வைத்து மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறை திணைக்கள அதிகாரிகளிடம் கைளிக்கப்பட்டனர்.

அவர்கள் இன்று ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலை யில் இன்று ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

கைதான 19 மீனவர்களில் 17 பேர் தமிழகத்தையும், 2 பேர் ஒரிசா மாநிலத்தையும் சேர்ந்தவர்களாவர்.



# சாந்தனை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாம்!

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்த பின்னர் விடுவிக்கப்பட்டுள்ள சாந்தனை இந்தியாவிலிருந்து நாட்டுக்கு அழைத்து வருவதற்காக, அவருக்குரிய கடவுச்சீட்டு தேவைப்பட்ட நிலையில், இலங்கை குடிவரவு, குடியகல்வு சட்டதிட்டங்களின் அமைவாக அவருக்குரிய கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறைக்குச் சாந்தனுடைய கடவுச்சீட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.



இதன்படி, சாந்தன் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான ஏற்பாடுகள் எதிர்வரும் நாள்களில் இந்திய அரசு தரப்பினால் மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பஸ்களில் முன்னெடுக்கப்பட்ட பெண்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கையின் போது 42 பேர் கைது



பொது போக்குவரத்தில் சிறுவர்கள், பெண்கள் துன்புறுத் தப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட நடவடிக்கை யொன்றை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

பஸ்களில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையின் போது 42 பேர் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக நாளாந்தம் முறைப்பாடுகள் கிடைப்பதை அடுத்து பதில் பொலிஸ்மா அதிபரின் உத்தர வின் பேரில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொது போக்குவரத்து சேவைகளை பொதுமக்கள் அதிகள வில் பயன்படுத்தும் காலை 8 மணி – 10 மணி மற்றும் மாலை 5 மணி – இரவு 7 மணி வரையான காலப்பகுதிகளுக்கு முன் னுரிமையளித்து, பொது போக்குவரத்து சேவைகளில் சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகள் கடமைகளில் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

இந்த காலகட்டத்தில் பஸ்கள், பஸ் நிலையங்கள், ரயில் நிலையங்கள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் சிவில் உடையில் பொலிஸ் குழுக்கள் கடமைகளில் ஈடுபடுத் தப்படவுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தெற்காசியாவில் மின் கட்டணம் அதிகம் அறவிடும் நாடு இலங்கை

## ‘வெறிட்டே ரிசேர்ஜ்’ ஆய்வில் தகவல்




தெற்காசியாவிலேயே அதிக மின்சார கட்டணம் இலங்கை யிலேயே வசூலிக்கப்படுவதாக “வெறிட்டே ரிசேர்ஜ்” ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் மின்சார கட்டணம் மூன்று மடங்கு அதிக மாக உள்ளதென அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

பொருளாதாரம் மற்றும் தொடர்புபட்ட பகுப்பாய்வுத் தக வல்களை வழங்கும் இலங்கையின் பிரபல நிறுவனமான public finance.lk-வின் பகுப்பாய்வு அறிக்கையில், 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளூர் மின்சார பாவனையாளர்கள் 100, 200, 300 அலகுகளை பயன்படுத்தியபோது செலுத் தியுள்ள கட்டணம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இதன் பகுப்பாய்வின் போது வழங்குநரின் உற்பத்திச் செலவு மாத்திரம் கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் மேலதிகமாக அறவிடப்படுகின்ற சமூக பாதுகாப்பு வரி போன்ற அரச வரிகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படவில்லை.

இலங்கைக்கு அடுத்ததாக தெற்காசியாவின் அதிக மின் கட்டணம் வசூலிக்கும் நாடாக பாகிஸ்தான் காணப்படுகின் றது.

எனினும், இலங்கையுடன் ஒப்பிடும்போது அங்கு கட்ட ணம் மிகவும் குறைவாகவுள்ளதெனவும் “வெறிட்டே ரிசேர்ஜ்” நிறுவனம் தெரிவித்துள்ளது.

100 அலகுகளை நுகரும் இலங்கையிலுள்ள வீடொன்று செலுத்த வேண்டிய மின்சார கட்டணம், அதே அலகுகளைப் பயன்படுத்தும் பாகிஸ்தான் வீடுகளில் அறவிடப்படும் கட்ட ணங்களை விட 50 வீதம் அதிகம் என பகுப்பாய்வு அறிக் கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சீனாவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற பார்வையிலே அமெரிக்காவின் நிர்வாகம் இயங்குவதாகக் கருதுகிறோம்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவிப்பு



(வசந்தன்)

பூகோள அரசியல் காரணமாக இலங்கைத் தீவை மையப் படுத்திய போட்டித்தன்மையிலே சீனாவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற பார்வையிலே அமெரிக்காவுடைய நிர்வாகம் இயங்குவதாக நாங்கள் கருதுகின்றோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அமெரிக்காவின் காங்கிரஸ் உறுப்பினர்களான "சமர் அலி" மற்றும் "லிகான் ஓமா" ஆகிய இருவருடனும் – அதன் பின்னர் – அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினரான "டொன் டேவிஸ்" என்பவருடனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. சந்திப்பொன்றை நேற்றுமுன்தினம் மாலை மேற்கொண்டிருந்தார். இந்தச் சந்திப்புக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்றைய பூகோள அரசியல் காரணமாக இலங்கைத் தீவை மையப்படுத்திய போட்ட த்தன்மையிலே சீனாவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற பார்வையிலே அமெரிக்காவுடைய நிர்வாகம் இயங்குவதாக நாங்கள் கருதுகின்றோம். அந்தவகையில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கத்தைய நாடுகளுக்கும், இந்தியா போன்ற நாடுகளுக்கும் சார்பான ஒரு நபராக கருதப்படுகின்றதனாலும், இந்த வருடம் ஒரு தேர்தல் நடைபெறவுள்ள காரணத்தினாலும் ரணில் விக்கிரமசிங்க இந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி மனித உரிமை மீறல்கள் – சட்டத்தின் ஆட்சி போன்ற ஜனநாயகத்துக்கு முக்கியமான தூண்களாக இருக்கக் கூடிய கொள்கைகள் அனைத்தையும் மீறி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். அதுமட்டுமல்லாமல் மிக மோசமான கொடூரமான சட்டங்களையெல்லாம் கொண்டுவந்து நிறைவேற்றுகின்றார்.

அந்தவகையில் நிகழ்நிலைக் காப்பு சட்டம் – வரவிருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் – அதேபோன்று நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் நிரந்தரமாக முடக்குவதற்குரிய உள்ளூர் சட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இனிவரப்போகும் உண்மை மற்றும் நல்லிணக்கம் குறித்த சட்ட விடயங்களையும் அவரச அவசரமாக கொண்டு வந்து நிறைவேற்றி – தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளை அதிகரித்து – சிங்கள பௌத்த இனவாத சக்திகள் மட்டத்தில் தன்னுடைய செல்வாக்கை வளர்த்தெடுத்து – ராஜபக்ஷ தரப்புக்கு கடந்த காலங்களிலே வாக்களித்த மக்களுடைய வாக்கு வங்கியை முழுமையாகக் கைப்பற்றி ஆட்சிக்கு வருவதற்கு முனைப்புக் காட்டி வருகின்றார்.

பூகோள அரசியல் காரணங்களுக்காக ரணில் விக்கிரமசிங்க மேற்கு சார்ந்த, இந்தியா சார்ந்த ஒரு விசுவாசியாக இருப்பதால் – அமெரிக்க இராஜாங்க திணைக்களம் மற்றும் அரசு என்பன ரணில் விக்கிரமசிங்க பாரதூரமான மனித உரிமை மீறல்கள் – ஜனநாயக விரோத செயற்பாடுகளைச் செய்கின்ற போதும், பெருமளவில் அதனை எதிர்க்காமல் கடமைக்கு மட்டும் கருத்துக்களைத் தெரிவிப்பதுடன் அமைதியாக இருக்கின்ற தன்மை காணப்படுகின்றது.

ஆகவே, இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கு செனட் சபையில் இருக்கக் கூடிய உறுப்பினர்களும் கீழ் சபையில் இருக்கக் கூடிய காங்கிரஸ் உறுப்பினர்களும் தமது குரலை எழுப்பி அழுத்தங்களை உருவாக்க வேண்டும். அவ்வாறன்றி இந்த நிலைமைகளில் மாற்றங்களைக் கொண்டு வருவது கடினமாக இருக்கும். அது மட்டுமல்லாமல் – இன்று பொருளாதார ரீதியாக முழுமையாக இலங்கை மேற்கத்தைய நாடுகளிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை இருக்கும் போது, அதுவும் விசேடமாக முதலீடுகள் எனப் பார்க்கின்ற போது, மேற்கத்தைய நாடுகளின் ஒத்துழைப்பில்லாமல் அந்த முதலீடுகள் வரப்போவதில்லை என்கின்ற ஒரு நிலையில் உதவி செய்வதற்கான நிபந்தனைகளைப் விதித்து பேரம் பேசக்கூடிய நிலைமை மேற்கு நாடுகளுக்கு இருக்கும் நிலையில் அதனைச் செய்யாமல் செயற்படுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுக்கின்றது.

ஆகவே, இப்படிப்பட்ட விடயங்களுக்கு அமெரிக்காவில்



இருக்கக் கூடிய நிர்வாகத்துக்கு முற்போக்குவாத சிந்தனையோடு செயற்படுகின்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் என்ற வகையில் இதில் கூடிய அக்கறை காட்ட வேண்டும் என் பதுடன் மிக அவசரமாகச் செய்ய வேண்டும் என்பதையும் நாங்கள் வலியுறுத்தியிருந்தோம்.

அத்தோடு, எதிர்காலத்தில் தமிழ் மக்களுடைய தமிழ்த் தேசத்தினுமைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அந்த நிலைப்பாட்டை பகிரங்கமாக வலியுறுத்தி அமெரிக்க அரசு அங்கீகரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பொறுப்புக்கூறல் தொடர்பாகவும் முழுமையான சர்வதேச விசாரணையை நிலை நாட்டுவதற்கு நேரடியாக குற்றவியல் நீதிமன்றம் போன்ற விடயங்களை வலியுறுத்தி பொறுப்புக்கூறல் சம்பந்தமாக மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு அவர்கள் தீவிரமாக உழைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருந்தோம்." – என்றார்.



# அரசமைப்பு மீறல்களுக்கு சபாநாயகரும் உடந்தை!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

**"உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களைப் புறக்கணித்தே நிகழ்நிலை காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசமைப்பு மீறல் செயற்பாட்டுக்குச் சபாநாயகர் துணை சென்றுள்ளார். சட்டத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை நீதியமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார். ஆகவே விசேட கட்சித் தலைவர் கூட்டத்தை ஏற்பாடு செய்யுங்கள்."**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களுக்கு அப்பாற்பட்ட வகையில் தான் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டுள்ளது. சட்டமூலத்தின் 11,16,19,20,27 உள்ளிட்ட சரத்துக்கள் உட்பட பெரும்பாலான சரத்துக்கள் திருத்தம் செய்யப்பட வேண்டும். அத்துடன் 16 மற்றும் 19 ஆவது சரத்துக்கள் நீக்கப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் வழிகாட்டல்களை முன்வைத்துள்ளது.

சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைக்கும் யோசனைகளை முறையாகச் செயற்படுத்த வேண்டியது நாடாளுமன்றத்தின் கடமையாகும். ஆனால் அரசமைப்புக்கும், உயர்நீதிமன்றத்துக்கும் அப்பாற்பட்ட வகையில் ஆளும் தரப்பினரது ஆதரவுடன் இந்தச் சட்டமூலம் சட்டமாக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மீதான நம்பிக்கை மலினப்படுத்தப்பட்டுள்ளது. அரசமைப்புக்கு எதிரான செயற்பாட்டுக்குச் சபாநாயகர் சிம்மாசனத்தில் அமர்ந்தவாறு ஒத்தாசை வழங்கியுள்ளார். சட்டமூலம் மீதான இறுதி விவாதத்தின் போது நாங்கள் வாக்கெடுப்பு கோரினோம். ஹெட்செட்டை காதில் அணிந்து கொண்டு எதிரணியினர் குறிப்பிடுவது கேட்காதது போல் இருக்கும் புதிய பழக்கத்தைச் சபாநாயகர் தற்போது கடைப் பிடிக்கிறார். – என்றார்.

இதன்போது குறுக்கிட்ட சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்கள் செயற்படுத்தப்பட்டதற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. என்னைத் தொடர்புப்படுத்தாதீர்கள். – என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் –

சட்டமூலம் மீதான இறுதி விவாதம் இடம்பெற்ற போது நீங்கள்தான் சபைக்குத் தலைமை தாங்கினீர்கள், அரசமைப்பு மீறல் செயற்பாட்டுக்கு நீங்கள் பொறுப்புக் கூற வேண்டும்.

இணையவழி பாதுகாப்பு சட்டத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை நீதியமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளார். ஆகவே உடனடியாக விசேட கட்சித் தலைவர் கூட்டத்தை ஏற்பாடு செய்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுங்கள். இந்த சட்டத்தில் பாரதூரமான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றை திருத்தம் செய்யுங்கள்." – என்றார்.



# பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணியில் ஈடுபடுபவர்களுக்கு இரண்டாயிரம் ரூபா அலவன்ஸ்

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்படும் நாளாந்த அலவன்ஸ் தொகையை 2,000 ரூபாவாக உயர்த்தி வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, 2022 கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை திருத்தப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு இதுவரையில் வழங்கப்பட்ட 1,450 ரூபா என்ற கொடுப்பனவு 2,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த முறை திருத்தப் பணிகளில் பங்கேற்கவுள்ள பணிக் குழாமினருக்கு சகல சேவைகளுக்காக கடந்த ஆண்டு திருத்தப்பட்ட அடிப்படையில் கட்டணம் செலுத்தப்படும் எனவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பீடத்தில் இருந்தபடி மூன்றாவது தடவைக்கு மேல் ரணில் விக்கிரமசிங்க உரை நிகழ்த்தி விட்டார்.

இப்படி நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடிக்கடி இடைநிறுத்துகின்றமைக்கு (Prorogue) பல காரணங்கள் – கற்பிதங்கள் – கூறப்படுகின்றன.

ஒவ்வொரு தடவையும் நாடாளுமன்றம் இடைநிறுத்தப்படும் போது அதுவரை செயற்பட்டுக் கொண்டிருந்த 'கோப்', 'கோபா' போன்ற நாடாளுமன்ற நிலையியல் குழுக்கள் செயலிழந்து விடும். மீண்டும் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமானதும், புதிய நிலையில் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவற்றின் பணிகள் புதிதாக ஆரம்பிக்கப்படும்.

அரச நிறுவனங்கள், அமைப்புகள், அமைச்சுக்கள் போன்றவற்றின் செயற்பாடுகள், நிதிக் கையாளுகைகள் போன்றவற்றை விசாரிக்கும் மேற்படி குழுக்கள் சில ஊழல், முறைகேடுகள் போன்ற விடயங்களைத் துருவித் துருவித் தேடி, விடயம் பகிரங்கமாகும் சூழ்நிலை வருகையில் இப்படி நாடாளுமன்றத்தை இடைநிறுத்தி விடுகின்றமையால் அந்த நிலையில் குழுக்களும் செயலிழந்து போய்விடுகின்றன. பின்னர் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் தொடங்கியதும் புதிய குழுக்கள், அவற்றுக்குப் புதிய உறுப்பினர்கள், புதிய தலைவர்கள் என்று அக்குழுக்கள் எல்லாவற்றையும் புதிதாக ஆரம்பிக்க வேண்டி இருக்கும். அவையும் கணிசமாக முன்னேறி, விவகாரங்கள் வெளியே வரப் போகின்றன என்றதும் மீண்டும் ஒரு நாடாளுமன்ற இடைநிறுத்தம் வந்துவிடும். மீண்டும் திரும்பவும் ஆரம்பத்திலிருந்து விடயத்தை தொடங்க வேண்டி இருக்கும்.

இந்த எண்ணத்தில்தான் நாடாளுமன்றக் கூட்டத் தொடர்களை இடைநிறுத்தம் முடிவுகள் அவ்வப்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்னெடுக்கப்படுகின்றன என்ற கருத்து தாராளமாக உண்டு. அது பெரும்பாலும் சரியானதும் கூட.

தனக்கு அதிகாரத்தைத் தாரைவார்த்த ராஜபக்ஷக்களின் ஊழல், மோசடிகள், குழப்படிகள் பற்றிய விவரங்கள் நாடாளுமன்றக் குழுக்களின் விசாரணைகளின் மூலம் அம்பலமாக அனுமதித்தால் தாம் தமது அரசை தொடர்ந்து கொண்டு நடத்த ராஜபக்ஷக்கள் விட மாட்டார்கள் என்ற அச்சத்திலும், ஜனாதிபதி பதவியை தனக்குத் தாரை வார்த்து அன்பளித்த ராஜபக்ஷகளுக்கு நன்றி விசுவாசத்தை காட்டும் விதத்திலும் இப்படி நாடாளுமன்றத்தை அடிக்கடி இடை நிறுத்திவைத்து நிலையியல் குழுக்களின் தொடர்ச்சியான விசாரணைகளை தடுத்து வருகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ற கருத்து உள்ளது. அது பெரும்பாலும் சரியாகவும் இருக்கும்.

இப்படி நாடாளுமன்ற அமர்வை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இடைநிறுவிறுத்துவதற்கான மற்றொரு முக்கிய காரணத்தை சுமந்திரன் எம்.பி. நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டிருக்கின்றார்.

"தன்னுடைய குறுகிய கால ஜனாதிபதிப் பதவியில் இப்படி நாடாளுமன்றத்தை இடை நிறுத்தி வைப்பதை பல தடவைகள் செய்து, அதனை ஒரு முறைமையாகவே அவர் கொண்டு வந்து விட்டார்.

"இப்படி ஒவ்வொரு முறையும் அவர் நாடாளுமன்றத்தை இடைநிறுத்தம் செய்யும்போது ஏன் அப்படி அவர் இடைநிறுத்துகின்றார் என்று பலரும் ஆச்சரியப்பட்டதும் உண்டு.

"அப்படி சிம்மாசன பிரசங்கம் செய்வதில் ரணிலுக்கு ரொம்ப – கொள்ளை – ஆசை. அடிக்கடி, செய்யக்கூடிய தடவைகள், அதனைச் செய்ய அவர் முற்படுகின்றார். அந்த அக்கிராசன ஆசனத்தில் இருந்து கம்பீரமாக உரையாற்ற அவருக்கு அதிகம் விருப்பம். கடந்த பல தசாப்தங்களாக மக்களுக்கும் நாடாளுமன்றுக்கும் தான் கூற விரும்பியவற்றை இப்போது கிடைத்த குறுகிய காலத்தில், பல தடவைகள் நாடாளுமன்றத்தை இடைநிறுத்தி, அதன் மூலம் ஆரம்ப வைபவத்தில் பேசுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி, நாடாளுமன்றத்திற்கும் மக்களுக்கும் தாம் விரும்பியவற்றைக் கூற அவர் முற்படுகின்றார்.

"இது இப்போது எங்களுக்கு உறுதியாகத் தெளிவாகி வருகிறது.

"அப்படி அவர் உரையாற்றி தமக்குத்தாமே மகிழ்வடையும் நேரத்தில் நாட்டில் மக்களும் நாடும் பொருளாதாரத் தொடர்பில் பெரும் குழப்பத்தில் – சிக்கலில் – மாட்டி முழித்துக் கொண்டு நிற்கின்றனர்" – என்றார் சுமந்திரன்.

ஆக, ஜனாதிபதி அடிக்கடி நாடாளுமன்றக் கூட்டத்தொடர் அமர்வை இடைநிறுத்துவதின் பின்னால் இத்தகைய பல சூத்திரங்கள் புதைந்து கிடக்கின்றன.

---

## அயோத்தி இராமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அயோத்தி இராமர் கோயிலுக்கு இன்று செல்கின்றார்.

புதுடில்லிக்கு இரண்டு நாட்கள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிலையிலேயே அவர் அயோத்தி இராமர் கோயிலுக்கும் செல்கின்றார்.

இந்நிலையில், இன்று மாலை அயோத்தி இராமர் கோயிலில் சிறப்பு பூஜைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், புதுடில்லியில் தங்கியிருக்கும் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பல்வேறு உயர் அதிகாரிகளைச் சந்திப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விஜயம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கலாசார மற்றும் மத உறவுகளை வலுப்படுத்துவதும் வகையில் அமையவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## மோ.சைக்கிளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனமடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபரே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யானை நடமாட்டம் உள்ள பகுதியான குறித்த பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் மீதே இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான நபர் இரத்தக்காயங்களுடன், துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் இடத்தில் இருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் வரை மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார் என்றும், அதன் பின்னரே மயங்கி கீழே வீழ்ந்துள்ளார் என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக ஆனமடுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்த நிலையில், அவர் மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து புத்தளம் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் கூறினர்.

தனிப்பட்ட தகராறு காரணமாகவே இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆனமடுவ பொலிஸாருடன் இணைந்து புத்தளம் தடயவியல் பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## அரசியல் தீர்வு குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரை மீதான ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி தனது உரையில் நாட்டின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. தான் பதவியேற்றபோது மக்களுக்கும் இந்தச் சபைக்கும் அவர் சொன்னது உடனடியாக இனப்பிரச்சினைக்கான தீர்வை நாங்கள் காண்போம் என்று கூறினார். அதற்கு நீங்கள் தயாரா, நீங்கள் தயாரா என இந்தச் சபையில் ஒவ்வொருவரையும் பார்த்து அவர் கேட்டார்.

அதன்பின்னர் அனைவரையும் சேர்த்து அனைத்துக் கட்சிகளின் மாநாட்டையும் மூன்று தடவைகள் கூட்டி இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்றெல்லாம் அவர் பறைசாற்றினார்.

அப்போது எங்களை அவர் அழைக்கின்றபோதே நாங்கள் சொன்னோம் இது வெறும் வார்த்தைகள். இதனைச் செய்ய அவருக்கு அரசியல் பலம் கிடையாது. இனப்பிரச்சினைக்கான தீர்வை எதிர்க்கின்றவர்களைப் போலிப் பெரும்பான்மையாகவைத்துக்கொண்டு ஜனாதிபதி இதனைச் செய்ய முடியாது. ஜனாதிபதி வெறும் வார்த்தை ஜாலங்களாலே எம்மை ஏமாற்றுகின்றார் என்று சொன்னோம். ஆனாலும், நாங்கள் இதற்குத் தடங்கலாக இருந்தோம் எனச் சொல்லாமல் இருப்பதற்காக அனைத்துக் கூட்டங்களுக்கும் நாங்கள் போனோம். எங்களுடைய ஒத்துழைப்பு முழுமையாக இருக்கும் என்பதை வெளிப்படுத்தினோம். அப்படிச் செய்திருந்தும்கூட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மூன்றாவது, நான்காவது கூட்டத்திலே எமது கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதியைப் பார்த்துச் சொன்னார் இந்தக் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளிலே ஒரேயொரு முடிவுதான் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று சொன்னார்.

கூட்டங்கள் கூடி, கூட்டங்கள் கூடிச் செய்வதாகச் சொல்லிச் சொல்லி செய்வதே தன்னுடைய பழக்கமாகக்கொண்ட ஜனாதிபதி இந்த விடயத்தை முற்றுமுழுதாக மறுதலித்தவராக அரச கொள்கைப் பிரகடனத்தை இங்கே உரையாற்றியிருக்கின்றார். அவரின்

07▶

# பல்கலை விரிவுரையாளர்கள் தாங்கள் பெற்ற கடனில் ரூ.1,300 மில்லியனை மீளச் செலுத்தத் தவறியுள்ளனர்

## நிதி அமைச்சர் விஜேதாச ராஜபக்‌ஷ தகவல்



**பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உயர் கல்விக்காக வெளிநாடுகளுக்கு செல்வதற்கு அரச வங்கிகள் மூலம் 1,300 மில்லியன் ரூபாவை கடனாக பெற்றுக் கொண்டுள்ள போதும் அதனை மீளச் செலுத்தத் தவறியுள்ளனர் என நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்‌ஷ தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

”மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகியவை நாட்டின் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே ஆரம்பிக்கப்பட்டன. குறிப்பாக அந்த வங்கிகள் மூலம் விவசாயத்துறை மற்றும் கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தில் அனைத்து விவசாய நிறுவனங்களிலும் இலங்கை வங்கி கிளை இயங்கி வந்துள்ளது.

அந்தந்தப் பிரதேசங்களில் வாழும் மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளுக்காக கடன் வழங்கும் நடைமுறையை அந்த வங்கிகள் முன்னெடுத்தன.

அந்த வகையில் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியன அவ்வாறு வழங்கியுள்ள மூன்றாம் கட்ட கடனில் 602 பில்லியன் ரூபா கடன் பெற்றுள்ளவர்களால் மீள செலுத்தப்படாமல் உள்ளது.

அந்த வகையில் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு நியாயமான வட்டியில் கடன் வழங்குவதற்கான வாய்ப்பு இருந்த போதும் அரச வங்கிகள் இரண்டும் பின்பற்றிய கொள்கை காரணமாக 602 பில்லியன் ரூபா நாட்டுக்கு இல்லாமற் போயுள்ளது. அந்த வகையில் நோக்கும் போது அரச வங்கிகளின் நிதி கொள்கைகள் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டி இருக்கின்றன.

மேலும், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்கு செல்வதற்கு அரச வங்கிகள் மூலம் 1,300 மில்லியன் ரூபாவை கடனாக பெற்றுக் கொண்டுள்ளபோதும் அதனை மீளச் செலுத்த தவறியுள்ளனர்.

அத்துடன், அந்த விரிவுரையாளர்கள் உயர்கல்வியை பெற்றுக் கொள்வதற்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ள நிலையில் அவர்கள் மீண்டும் தத்தமது பல்கலைக்கழகங்களுக்கு வருகை தரத் தவறியுள்ளார்கள். அதனால் இந்த பணத்தை அறவிடுவதற்கு பல்கலைக்கழக கட்டமைப்போ அல்லது வங்கிகளோ உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.”– என்றார்.

## அரசியல் தீர்வு குறித்து...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கொள்கை விளக்க உரையை நாங்கள் முற்று முழுதாக நிராகரிக்கின்றோம். ஏனென்றால் இந்த நாட்டிலே பொருளாதாரப் பிரச்சினை ஏற்படுவதற்கு அத்திவாரமே இந்த நாட்டிலே இருக்கின்ற தமிழ்த் தேசியப் பிரச்சினை. அதற்கான ஒழுங்கான ஓர் அரசியல் தீர்வு இல்லாமல் ஓர் ஆயுதத் தீர்வை இலங்கை அரசு முன்வைத்து அதற்காகக் கடன்கள் பெற்று நாட்டின் பொருளாதாரத்தையே நாசமாக்கி விட்டிருக்கின்றமையை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து நாட்டு மக்கள் பெரும் குழப்பத்தில் உள்ளனர். நாட்டின் பொருளாதாரத்தைத் தான் தலைகீழாக மாற்றி அமைத்து விட்டார் என்று புகழுரைத்து வாய்மொழி மூலம் வெட்டி வீழ்த்திக் காட்டக்கூடிய திறமைசாலிப் பேச்சாளர் நம் ஜனாதிபதி. அதையே அவர் செய்கின்றார். அவை உள்ளீடு இல்லாத வெறும் வார்த்தை ஜாலங்கள் என்பது எங்களுக்கு நன்கு தெரியும்.

பொருளாதாரம் வழமை நிலைக்கு மீண்டு விட்டதாக ஒரு தோற்றப்பாடு காட்டப்படுகின்றது. தமது நீண்டகால அனுபவம் மூலம் பொருளாதாரக் கப்பலை ஆட்டமில்லாத ஸ்திர நிலைக்கு ஜனாதிபதி மாற்றி உள்ளார் என்பது உண்மையே. அதற்காக அவரை நாம் பாராட்டுகின்றோம்.

ஆனால், கடன் மீள்செலுத்துகைக்கான தடைக்காலத்தை நீங்கள் தொடர்ந்து பேணும்போது அது ஒருநாள் ஊதி வெடிக்கும் அனர்த்தம் ஆகிவிடும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அந்தத் தடைக்காலம் உங்களுக்கு உடனடியாக மூச்சு விடும் நிவாரணத்தை தரலாம். ஆனால் நாட்டைச் சூழ்ந்த கருமேகங்கள் கொஞ்சம் தள்ளிப் போய், சற்று தாமதமாக நாட்டைச் சுளுவது போன்றது இது.

அதுபோல சர்வதேச நாணய நிதியத்தின் நிவாரணம் கூட மேலும் கடன் பெறுவதற்கு எங்களுக்கு வசதிகளைத் தேடித் தந்திருக்கின்றது. அவ்வளவுதான். நாங்கள் கடன் வாங்கத் தான் வேண்டும். அதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அது உண்மையில் நம்மை மேலும் கடனாளியாக்கப் போகின்றது என்பதுதான் கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

எனவே, வெளியில் நிலைமை மேம்பட்டமை போல் தெரியும். ஆனால், உண்மை அதுவல்ல. ஒரு நீண்ட கால அவதானிப்பு அது உண்மை நிலைமை அல்ல என்பதை எங்களுக்குத் தெளிவுபடுத்தும். நாடு இதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த ஆண்டை தேர்தல் வருடமாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். எங்கள் நாட்டின் அரசமைப்பும் சட்டங்களும் தேர்தல்கள் காலக்கிரம படி ஒழுங்காக நடத்தப்பட வேண்டும் என்று கூறுகின்றன. ஆனால், இங்கு குடியாட்சி அல்ல, முடியாட்சி நடக்கின்றமை போல் தேர்தல்களை நடத்தும் பொறுப்பை ஜனாதிபதி தன் கையில் எடுத்து தனக்கேற்ப முன்னெடுக்க முயலுகின்றார்.

கடந்த வருட முற்பகுதியில் நடத்தப்பட்டிருக்க வேண்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தலை முறையற்ற விதத்தில் அவர் தடுத்துவிட்டார். அது அரசமைப்பை மீறிய செயற்பாடு. மாகாண சபைத் தேர்தல்களையும் நடத்தாமல் ஜனாதிபதி இழுத்தடித்து வருகின்றார்.

இப்போது இந்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என்று அவர் கூறுகின்றார். ஆனால் வலது பக்கம் திரும்புவதாக சிக்னல் போட்டு விட்டு, சடாரென இடது பக்கம் திரும்பும் போக்கைக் கொண்ட நமது ஜனாதிபதி இந்தத் தேர்தல் விடயத்திலும் என்ன திட்டம் உள்ளே வைத்திருக்கின்றாரோ தெரியவில்லை.” – என்றார்.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தள்ளிப் போகுமா தேர்தல்?

எப்போதுமே தேர்தல்களைக் கண்டு அஞ்சும் தொடை நடுங்கியாகவே ரணில் விக்கிரமசிங்கவை நாடு கண்டு வந்திருக்கின்றது. தேர்தல்கள் தொடர்பான அவரின் செயற்பாடு - அது பற்றிய மக்களின் பட்டறிவு - அப்படித்தான் உள்ளது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த நல்லாட்சி அரசின் காலத்தில் இவ்விடயத்தில் அவரின் நடவடிக்கை பிரசித்தமானது.

2015 ஜனவரியில் ஜனாதிபதி தேர்தலிலும், ஓகஸ்டில் பொதுத் தேர்தலிலும் குறிப்பிடத்தக்க வெற்றியீட்டி, நல்லாட்சி அரசு அமைத்த போது, கொஞ்சம் தலைக்கனமாகத்தான் நடந்து கொண்டார் அந்த அரசின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்க.

2018 இல் அவரது அரசு உள்ளூட்சித் தேர்தலை நடத்தப் போக, அதற்கு முதல் ஆண்டுதான் புதிய கட்சியாக உருவெடுத்த மொட்டுக் கூட்டணி பெரு வெற்றியீட்டி ரணில் உட்பட்ட அப்போதைய ஆட்சித் தரப்புக்கு மரண அடி கொடுக்க, அதில் கலங்கிப் போனார் அவர்.

அதற்குப் பின்னர் மாகாண சபை தேர்தல்களை எதிர்கொள்ளக் கூட அவர் அஞ்சினார். இரண்டு மாகாண சபைகளுக்கான தேர்தல்களை தேர்தல் ஆணையம் அறிவிக்க இருக்கையில், மாகாண சபைத் தேர்தல் சட்டங்களைச் சீர்திருத்துகின்றோம் என்ற பெயரில் அவசர அவசரமாக ஒரு சட்ட மூலத்தை நிறைவேற்றி, அதுவரை இருந்த மாகாண சபைத் தேர்தல்களுக்கான சட்டத்தை இல்லாமல் ஆக்கினார். அதன் மூலம் நாட்டில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாத நிலைமையை ஏற்படுத்தினார். அதனால்தான் கடந்த ஆறு ஆண்டுகளாக நாட்டில் மாகாண சபைத் தேர்தல்களே நடக்கவில்லை. அந்தத் தேர்தல் சட்டங்களை மீள நடைமுறைக்குக் கொண்டு வராதவரை மாகாண சபை தேர்தல் நாட்டில் இனி நடக்காது என்பதே நிலைமை.

இனி வரக்கூடிய ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர், நாட்டில் தேசிய ரீதியான ஒரு தேர்தல் நடந்தால், அதன் முடிவு அடுத்த ஜனாதிபதி தேர்தலில் எதிர்த்தரப்புகளின் கையைப் பலப்படுத்திவிடும் என்று அஞ்சிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதன் காரணமாக கடந்த வருட முற்பகுதியில் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலைத் தமது அதிகாரம் மூலம் முடக்கி இல்லாமலாக்கினார்.

இப்போதும் கூட, இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலை எப்படியும் நடத்தியாக வேண்டும். அரசமைப்பின்படியும், சட்டங்களின்படியும் இது கட்டாயம். தேர்தல்கள் உரிய காலத்தில் நடக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவே அறிவித்துள்ளார்.

ஆனால் அந்த அறிவிப்புக் குறித்தும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் அவநம்பிக்கை வெளியிட்டு இருக்கின்றார்.

"வழக்கமாகவே 'ரைட்'டில் சிக்னல் போட்டு விட்டு, 'லெவ்டில்' திரும்பும் பழக்கம் கொண்டவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. இந்த வருடம் ஜனாதிபதி தேர்தலும் பொது தேர்தலும் நடைபெறும் என்று இப்போது அவர் அறிவித்தாலும், தேர்தல் தொடர்பில் அவர் உள் மனதில் என்ன திட்டம் உள்ளது என்பது யாருக்கும் தெரியாது" - என்ற சாரப்பட கருத்து வெளியிட்டிருக்கின்றார் சுமந்திரன்.

அதாவது, ஜனாதிபதி தேர்தலும் பொதுத்தேர்தலும்இவ்வருடத்தில்நடைபெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தாலும்,அது குறித்து சுமந்திரன் இன்னும் அவநம்பிக்கையே கொண்டிருக்கிறார் என்பது அவரது நாடாளுமன்ற உரையில் இருந்து தெரிய வருகின்றது.

இதே சாரப்பட்ட கருத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் மூத்த பிரமுகரும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்திருக்கிறார்.

"கடைசி நேரத்தில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கிறோம் என்ற கதையை அவிழ்த்துவிட்டு, அதற்காக நேரத்தை வாங்கும் வேலையாக ஜனாதிபதித் தேர்தலை ஒரு வருட காலத்துக்குத் தள்ளிப் போடும் முயற்சிகள் குறித்து எங்களுக்குத் தெரிய வந்திருக்கின்றது" - என்று கிரியல்ல நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்.

"ஆனால் ஜனாதிபதித் தேர்தலை தள்ளிப் போட அரசு முயன்றால் நாங்கள் பொதுமக்களுடன் வீதிக்கு இறங்குவோம்" - என்று அவர் எச்சரித்திருக்கின்றார்.

தேர்தலை எதிர்கொள்ள அஞ்சும் ரணில் விக்கிரமசிங்க, தேர்தலை தள்ளிப் போட வைக்க எதுவும் செய்வார், என்னவும் செய்வார்...!




# 13 தனியார் பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் இ-மெயில்

## சென்னையில் பரபரப்பு

சென்னையில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட வெடிகுண்டு மிரட்டல் இ-மெயில் குறித்து சென்னை பெருநகர பொலிஸார், சைபர் கிரைம் பிரிவில் வழக்குப் பதிவு செய்து, மின்னஞ்சல் அனுப்பிய நபரை பிடிக்க தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

எனவே, மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினர் அச்சப்பட வேண்டாம் என சென்னை பெருநகர பொலிஸார் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பொலிஸ் தரப்பில் கூறிப்பிடுகையில்,

“நேற்று காலை 10 மணியளவில், சக்தி வாய்ந்த வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாகவும், பாடசாலைகளிலிருந்து குழந்தைகளை வெளியே அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு, சென்னை பெருநகர பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட 13 தனியார் பாடசாலைகளுக்கு அடையாளம் தெரியாத நபர் மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் அனுப்பியுள்ளார்.

இந்த தகவலை பெற்றதும் சென்னை பெருநகர பொலிஸ் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், உத்தரவின் பேரில், சம்பந்தப்பட்ட பொலிஸார், வெடிகுண்டு செயலிழப்பு குழு மற்றும் மோப்ப நாய்களுடன், மேற்படி பாடசாலைகளில் நிலையான வழிகாட்டுதல் நெறிமுறைகள் படி சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி தேடுதலின் போது வெடிகுண்டு எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை என்பதும், மின்னஞ்சல் மூலம் வந்த மிரட்டல் புரளி என தெரியவந்தது.

மேற்கண்ட வெடிகுண்டு மிரட்டல் இ-மெயில் குறித்து சென்னை பெருநகர பொலிஸார், சைபர் கிரைம் பிரிவில் வழக்குப் பதிவு செய்து, மின்னஞ்சல் அனுப்பிய நபரை பிடிக்க தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். எனவே, மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினர் அச்சப்பட வேண்டாம் என சென்னை பெருநகர பொலிஸ் சார்பில் அறிவுறுத்தப்படுகிறது.

இனி வரும் காலங்களில், இதுபோன்ற மிரட்டல் மின்னஞ்சல்கள், அழைப்புகள், கடிதங்கள் ஏதேனும் வந்தால், சென்னை பெருநகர பொலிஸ் எல்லைக்குட்பட்ட பாடசாலைகளின் நிர்வாகம், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அச்சம் கொள்ளாமல், பள்ளியின் இயல்பான செயல்பாட்டை சீர்குலைக்க வேண்டாம் என்றும், உடனடியாக பொலிஸ் உதவி எண் 100 அல்லது 112 ஆகியவற்றிற்கு தகவல் தெரிவித்தால், பொலிஸ் மூலம் தேவையான உதவிகள் விரைந்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இது போன்ற புரளியான மின்னஞ்சல் மிரட்டல்கள், அழைப்புகள் அனுப்புபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்” என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாந்தனை விடுவித்தது போன்று தம்மையும் விடுவிக்க கோரி ஏனையோர் உண்ணாவிரதம்!

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சாந்தனை விடுவித்ததை போன்று தம்மையும் விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி ஏனையவர்களும் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் மற்றும் தலைமைச் செயலருக்கு றொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய இருவரும் தனித்தனியாக கடிதம் எழுதியுள்ளனர்.

இதனையடுத்து சிறப்பு முகாமில் பொலிஸாரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட முருகன், சாந்தன், றொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர், திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு சாந்தனுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதால், சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில், திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள சாந்தன், தன்னை விடுதலை செய்து, குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ அனுமதிக்க வேண்டும் என்பது



உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்

இதனையடுத்து, சாந்தன் விடுவிக்கப்பட்டு அவரை நாட்டுக்கு அழைத்து வருவதில் எந்தவித ஆட்சேபனைகளும் இல்லை என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, சாந்தனை விடுவித்ததை போன்று தம்மையும் விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி ஏனையோரும் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# காசா போரை நிறுத்துவதற்கு மூன்று கட்டச் செயல் திட்டம்

## நிராகரித்தார் இஸ்ரேல் பிரதமர்





காசா பகுதியில் நான்கு மாதங்களுக்கும் மேலாக நடைபெற்று வரும் போரை நிறுத்த மூன்று கட்ட செயல் திட்டத்தை ஹமாஸ் இயக்கம் முன்வைத்துள்ளது.

மூன்றாவது கட்டத்தின் முடிவில் இஸ்ரேலுடன் முழுமையான போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் என நம்புவதாகவும் ஹமாஸ் தெரிவித்துள்ளது.

அதன்படி முதல் கட்டத்தில், இஸ்ரேல் சிறைகளில் உள்ள 1500 பலஸ்தீன பெண்கள் மற்றும் குழந்தைகள் விடுவிக்கப்பட்டால், ஹமாஸ் பிடியில் உள்ள 19 வயதுக்கு உட்பட்ட இஸ்ரேலைச் சேர்ந்த அனைத்து பெண்கள், ஆண்கள், வயதான மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

இரண்டாவது கட்டத்தில், மீதமுள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர் என குறிப்பிடப்படுகிறது, மூன்றாவது கட்டத்தில் இறந்தவர்களின் சடலங்களும் ஒப்படைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, போர் நிறுத்தம் வேண்டுமென ஹமாஸ் அமைப்பினர் விடுத்த கோரிக்கையை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு நிராகரித்துள்ளார்

ஹமாஸ் அமைப்பு விடுத்துள்ள போர் நிறுத்த ஒப்பந்தம் ஒரு மாயை எனவும் அந்த அமைப்புக்கு எதிராக முழுமையான வெற்றியை அடையும் வரை போர் தொடரும் என்றும் நேதன்யாகு கூறியுள்ளார்.

இதேவேளை, இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் மீது தீவிரவாதி ஒருவர் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

மேற்குக் கடற்கரையின் வடக்குப்பகுதியில் உள்ள தெய்ர் ஷராஃப் கிராமத்தின் நுழையிலில் காவலில் ஈடுபட்டு வந்த இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, மேற்படி நபரின் தாக்குதலினால் பலஸ்தீனர்கள் பலரும்கூட பாதிக்கப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட பலஸ்தீனர்களுக்கு இராணுவ மருத்துவர்கள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டுவருவதாக கூறப்படுகிறது.

மேலும், தாக்குதலின் போது இஸ்ரேலிய இராணுவ வீரர் ஒருவரின் தலைக்கவசத்தில் குண்டு பாய்ந்ததாகவும், அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

அதேவேளை, தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் இஸ்ரேல் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கின்றார் என்றும் கூறப்படுகிறது.

# பிலிப்பைன்ஸில் நிலச்சரிவு: 6 பேர் பலி, 46 பேர் மாயம்





பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 6 போர் உயிரிழந்துள்ளனர். 46 பேரைக் காணாமல் போயுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியில் தங்கச் சுரங்கங்கள் அமைந்துள்ள கிராமமொன்றில் இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதன்போது காணாமல்போனவர்களில் 27 போர்வீதியில் நிறுத்தப்பட்டிருந்த 2 பஸ்களில் அமர்ந்திருந்த சுரங்கத் தொழிலாளர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அனர்த்தம் இடம்பெற்ற பகுதிகளில் இராணுவம், பொலிஸார் மற்றும் தன்னார்வலர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு நிலச்சரிவில் காயமடைந்த 31 பேரை மீட்டனர்.

இந்த நிலச்சரிவில் 300 குடும்பங்களைச் சேர்ந்தோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# சீனாவின் நுகர்வோர் விலைச் சுட்டெண் வீழ்ச்சி



சீனாவின் நுகர்வோர் விலைச் சுட்டெண் கடந்த 14 ஆண்டுகளில் முதன் முறையாக வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன், உற்பத்தி விலைச் சுட்டெண்ணும் வீழ்ச்சியடைந்துள்ளதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, சீனாவின் பொருளாதார கொள்கையை புதுப்பிப்பதற்கான அழுத்தம் அதிகரித்துள்ளது.,

# எரிபொருள் விநியோகத் திட்டத்திலிருந்து ஆஸ்திரேலிய நிறுவனம் நீக்கப்படுகின்றது

## இராஜாங்க அமைச்சர் டீ.வி.சானக தகவல்

**“இலங்கையில் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ள ஆத்திரேலியாவின் யுனைடட் பெற்றோலியம் நிறுவனத்தை அந்தத் திட்டத்திலிருந்து நீக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.”**

**- மின்சக்தி மற்றும் வலு சக்தி இராஜாங்க அமைச்சர் டீ.வி.சானக இவ்வாறு தெரிவித்தார்.**



ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“சைனோபெக் நிறுவனத்துக்கு எரிபொருள் விநியோக நடவடிக்கைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டமையால், எரிபொருள் இறக்குமதிக்காக வருடாந்தம் செலவிடப்படும் 500 மில்லியன் டொலரை அரசாங்கத்தால் மீதப்படுத்த முடிந்துள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐ.ஓ.சி. மற்றும் சைனோபெக் ஆகிய நிறுவனங்களுக்கிடையில் போட்டி காணப்படுகிறது. இதன் மூலம் இனிவரும் காலங்களில் எரிபொருள் விலைகளில் மக்களுக்குச் சிறந்த நிவாரணம் கிடைக்கும் என்று நம்புகின்றோம்.

தற்போது அமெரிக்காவின் ஆர்.எம். பார்க் நிறுவனம் 3 மில்லியன் டொலரை வைப்பு செய்துள்ளது. அனுமதிப்பத்திர கட்டணமாக 2 மில்லியக் டொலரும், நிலையான வைப்பாக 1 மில்லியன் டொலரும் இவ்வாறு வைப்பு செய்யப்பட்டுள்ளன. எனவே விரைவில் இந்த நிறுவனம் அதன் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால் ஆஸ்திரேலியாவின் யுனைடட் பெற்றோலியம் நிறுவனம் கால அவகாசம் கோரியுள்ள போதிலும், எவ்வித வைப்புக்களையும் பேணவில்லை.

எனவே இந்த நிறுவனம் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கமைய செயற்படாவிட்டால், இந்த திட்டத்திலிருந்து அதனை நீக்கி விட்டு, ஏனையோருக்கு வாய்ப்புக்களை வழங்குவதற்கு அமைச்சு மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் ஆராய்ந்து இந்த நிறுவனத்தை நீக்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.”– என்றார்.

# யாழில் தென்னிந்திய நடிகைகளுடன் புகைப்படம் எடுக்க மாநகர சபையிடம் அனுமதி பெறவில்லை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் தென்னிந்திய திரைப்பட நடிகர், நடிகைகளோடு புகைப்படம் எடுப்பதற்கும் சந்திப்பதற்கும் 30 ஆயிரம் ரூபா கட்டணம் அறவிடப்படும் நிகழ்வுக்கு யாழ். மாநகர சபையிடம் எவ்வித அனுமதியும் பெறப்படவில்லை என்ற விடயம் அம்பலமாகியுள்ளது.

கேளிக்கை நிகழ்வுகளுக்கு நுழைவுச்சீட்டு விற்பனை செய்வதாயின் மாநகர சபையின் அனுமதி பெறப்பட வேண்டும் என்பதுடன், நுழைவுச்சீட்டின் பெறுமதியில் குறிப்பிட்ட வீதம் மாநகர சபைக்கு வரியாகச் செலுத்தப்பட வேண்டும் என்பதும் நடைமுறையாகவுள்ளது.

எனினும், அவ்வாறான எவ்வித அனுமதிகளும் இன்றி நேற்றும் இன்றும் நடிகர் நடிகைகளோடு புகைப்படம் எடுப்பதற்கும் சந்திப்பதற்கும் 30 ஆயிரம் ரூபா கட்டணம் அறவிடப்படும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகம் ஒன்றின் ஏற்பாட்டில் இன்று இந்திய பிரபல பாடகர் ஹரிஹரன் கலந்துகொள்ளும் இசை நிகழ்ச்சி ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்த இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் வருகை வந்துள்ள திரைப்பட நடிகர், நடிகைகளோடு புகைப்படம் எடுப்பதற்கும் சந்திப்பதற்கும் ஒருவருக்கு 30 ஆயிரம் ரூபா அறவிடப்படும் என்று குறித்த தனியார் நிறுவனத்தால் இரு வேறு நிகழ்வுகள் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விளம்பரம் சமூக ஊடகங்களில் சர்ச்சைகளை உருவாக்கிய நிலையில் குறித்த நிகழ்வு தொடர்பாக எம்மிடம் அனுமதி கோரப்படவில்லை எனவும், அவ்வாறு நடந்தால் அதற்கான கட்டணம் அறவிடப்படும் எனவும் யாழ். மாநகர சபை ஆணையாளர் நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

மேலும் ஹரிஹரனின் இசை நிகழ்ச்சி தொடர்பில் 25 ஆயிரம் ரூபா அனுமதிக் கட்டணத்தில் 500 இருக்கைகளுக்கும், 7 ஆயிரம் ரூபா அனுமதிக் கட்டணத்தில் ஆயிரம் இருக்கைகளுக்கும், 3 ஆயிரம் ரூபா அனுமதிக் கட்டணத்தில் 2 ஆயிரம் இருக்கைகளுக்கும் மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டது என்றும் அவர் மேலும் கூறினார்.

## தேரர் சுட்டுக்கொலை:

# கைக்குண்டு சகிதம் சந்தேகநபர் கைது!

கம்பஹா, மல்வத்துஹிரிபிட்டிய பிரதேசத்திலுள்ள விகாரையொன்றில் தேரர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹோமாகம, முல்வேகம பகுதியில் வைத்தே மேற்படி நபர் மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

29 வயதான மேற்படி நபரே கொலையாளிகள் பயணித்த காரின் சாரதியாகச் செயற்பட்டுள்ளார்.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ரி – 56 ரக துப்பாக்கி, இத்தாலியில் உற்பத்தி செய்யப்பட்ட கைக்குண்டு, கொலையாளிகள் பயணித்த காரின் சாவி என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கம்பஹா மல்வத்துஹிரிபிட்டிய பிரதேசத்தில் கடந்த ஜனவரி மாதம் 23ஆம் திகதி அதிகாலையில் விகாரை ஒன்றில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது. இதில் 45 வயதான தேரர் ஒருவர் சாவடைந்தார். சம்பவத்தின் பின்னர் கொலையாளிகள் பயணித்த கார் தீக்கிரையாக்கப்பட்டது.

# ஜனாதிபதியின் பொருளாதாரத் திட்டங்கள் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நம்பிக்கை



**"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தெளிவான பொருளாதார வேலைத் திட்டங்கள் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன."**

**- இவ்வாறு துறைமுகங்கள், விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாட்டைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்திற்குச் சர்வதேசமும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வரும் நிலையில் சர்வதேச ரீதியில் எமது நாடு மீதான நம்பிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. சர்வதேசத்துடன் இணைந்து செயல்படாமல் எம் போன்ற நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவது அசௌகரியமான விடயமாகும்.

நாட்டின் சுற்றுலாத்துறை தற்போது சிறந்த முன்னேற்றம் அடைந்து வருகிறது. கடந்த மாதத்தில் மாத்திரம் இரண்டு லட்சம் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். போராட்ட காலத்தில் 25 சுற்றுலாப் பயணிகள் கூட நாட்டுக்கு வராத நிலையில் தற்போது சுற்றுலாத்துறை சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளது.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குச் சிறந்த பங்களிப்பை வழங்குவதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு முடிந்துள்ளது. அந்த வகையில் ஒரு டொலர் கூட கையிருப்பில் இல்லாத இந்த நாட்டில் தற்போது 4.4 பில்லியன் டொலர்கள் கையிருப்பில் காணப்படுகின்றன. இது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தெளிவான பொருளாதார வேலைத் திட்டத்தின் பயனாகும்,

அத்துடன் இந்த வருடம் நிச்சயமாக ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும். அதனால் அதற்கு முகங்கொடுக்கத் தயாராகுங்கள். நாங்களும் தயாராகிறோம்."– என்றார்.

# வடக்கின் அபிவிருத்திக்கு உதவ நெதர்லாந்து தயார்





வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான பங்களிப்பைச் செய்யத் தயார் என நெதர்லாந்து துணைத்தூதுவர் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான துணைத்தூதுவர் இவன் ருட்ஜென்ஸ் (ஐறயஅ சுரவதநளெ), வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆளுநர் தெளிவுப்படுத்தினார்.

விடயங்களை கேட்டறிந்த நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான துணைத்தூதுவர் இவன் ருட்ஜென்ஸ், குடாநாட்டிற்கான குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்கத் தயார் எனக் கூறினார்.

அத்துடன் முதலீட்டுத் திட்டங்களை ஊக்குவித்து வடக்கு மாகாண அபிவிருத்திக்கு தேவையான பங்களிப்பை வழங்கவும் தயார் என அவர் உறுதியளித்தார்.

# அலிசாஹிர் மௌலானா எம்.பியுடன் இந்தியத் துணைத் தூதுவர் சந்திப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் கலாநிதி சத்யஞ்சல் பாண்டே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அலி சாஹிர் மௌலானாவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.



இந்தச் சந்திப்பு கடந்த செவ்வாய்க் கிழமை மட்டக்களப்பிலுள்ள விடுதியொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் சமகால விவகாரங்கள், அபிவிருத்தி, சமூக, கல்வி, கலாசார மற்றும் பொருளாதார விடயங்கள் குறித்து துணைத் தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக எடுத்துக் கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா, அவற்றுக்கான தீர்வு முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடினார்.

இவ்வாறான விடயங்களில் இந்தியாவினது வகிபாகம் தொடர்பில் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன எனவும் இச்சந்திப்பு திருப்திகரமாக அமைந்திருந்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

# மட்டு. மாவட்டத்தில் விவசாயிகளிடம் நெல் கொள்வனவின் போது மோசடி!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பில் விவசாயிகளிடம் அரசாங்கத்தினால் அனுமதியளிக்கப்படாத தராசின் மூலம் நெல் கொள்வனவில் ஈடுபட்டுவரும் வியாபாரிகளுக்கு எதிராக அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் சட்டவிரோத தராசின் மூலம் மோசடியாக நெல் கொள்வனவு செய்து வந்த 8 வியாபாரிகளின் தராசுகள் கைப்பற்றப்பட்டன. அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அளவீட்டுத் திணைக்கள அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது நெல் அறுவடை இடம்பெற்று வரும் நிலையில் விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்து வரும் வெளிமாவட்ட வியாபாரிகள் தராசில் மோசடி செய்து விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்துவருகின்றனர் என மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்ரினா முரளிதரனின் கவனத்திற்கு பாதிக்கப்பட்ட விவசாயிகள் கொண்டுவந்துள்ளனர்.

இந்த நிலையில் வயல்பகுதிகளில் நெல் கொள்வனவில் ஈடுபட்டுவரும் வியாபாரிகளின் தராசை பரிசோதனை செய்யமாறு அரசாங்க அதிபர் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்கள பணிப்பாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். அதனையடுத்தே சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று முன்தினம் புதன்கிழமை மாவட்ட பணிப்பாளர் வி.விக்கினேஸ்வரன் தலைமையில் பரிசோதனை உத்தியோகத்தர்களான எம்.கிருஷ்ணானந்தன், எம்.ஆர்.எம். றைஸ்கான் உள்ளிட்ட அதிகாரிகள் செங்கலடி மற்றும் கிரான் பிரதேசங்களில் உள்ள வயல் பகுதிகளில் லொறிகளில் நெல் கொள்வனவு செய்துவரும் வியாபரிகளின் தராசுகளை பரிசோதனை செய்தனர்.

இதில் அரச அனுமதியற்ற 5 தராசுகளும் நடப்பாண்டில் முத்திரை பொறிக்கப்படாத 3 தராசுகளுமாக 8 தராசுகளை கைப்பற்றப்பட்டன. 8 வியாபரிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட தராசுகள் திணைக்களத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட தராசுகளை அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்திற்கு அரசாங்க அதிபர் நேரடியாக சென்று பார்வையிட்டார். தொடர்ந்தும் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

# பாரதியார் பாடலைப் பாடி 'ஒற்றுமை' வகுப்பெடுக்கும் ரணில் பாரதம் போன்று இங்கும் அதிகாரப் பகிர்வுக்கு முன்வருவாரா?



## கேள்வி எழுப்புகின்றார் ரவிகரன்

**(விஜயரத்தினம் சரவணன்)**

பாரதியாரின் பாடலைப்பாடி ஒற்றுமை பற்றி வகுப்பெடுக்கும் அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் பாரததேசத்தைப் போன்று முழுமையாக அதிகாரங்களை பகிர்ந்தளிக்க முடியுமா என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழ்பேசும் சிறுபான்மைச்சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வழங்காது, பெரும்பான்மையின ஆட்சியாளர்கள் தொடர்ந்து தமிழ்ப் பேசும் மக்களுக்குத் துரோகமிழைத்து வருகின்றனர் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின், ஐந்தாவது கூட்டத்தொடரின் ஆரம்ப நிகழ்வில் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய கொள்கை விளக்கவுரை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

அரச தலைவர் குறித்த தனது கொள்கை விளக்கவுரையிலே நாட்டைக் கட்டியெழுப்பும் கனவை நனவாக்க தமிழ், முஸ்லிம் கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட அழைப்பு விடுத்திருந்தார்.

அதேவேளை ஒற்றுமையை வெளிப்படுத்தும் பாரதியார் பாடல் வரிகளையும் குறிப்பிட்டு, அவ்வாறான எண்ணம் எமக்கு ஏன் வரவில்லை எனவும், எமது நாட்டு இளைய சமூகத்தின் எதிர்காலத்திற்காக ஒன்றுபடமுடியாதிருப்பது ஏன் எனவும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

தேர்தல் ஒன்று நெருங்கிவருகின்ற சூழலில்தான், அரசதலைவர் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளினதும், மக்களதும் ஒற்றுமையைப் பற்றிப் பேசுகின்றார். அரசதலைவரின் இத்தகைய பேச்சுக்கள் மிகவும் வேடிக்கையாகவுள்ளன.

குறிப்பாக அரசதலைவர் தனது உரையிலே –

"முப்பதுகோடி முகமுடையாள்–உயிர் மொய்ப்புற வொன்றுடையாள்–இவள் செப்பு மொழிபதினெட்டுடையாள்– எனிற் சிந்தனை ஒன்றுடையாள்"

– இவ்வாறு ஒற்றுமையை வெளிப்படுத்தும் பாரதியார் பாடல் வரிகளையே தனது உரையில் குறிப்பிட்டுப் பேசினார்.

பாரததேசம் முப்பதுகோடி மக்களைக் கொண்டிருந்தாலும் அதன் உயிர் ஒன்றுதான். பாரதநாட்டில் பதினெட்டு மொழிகள் இருந்தாலும் அவை வெளிப்படுத்தும் சிந்தனை ஒன்றுதான் என்பதே அந்த பாரதியாரின் பாடல்வரிகளின் பொருளாகும்.

உண்மையில் பாரதத்தைப் பொறுத்தவரையில் அங்கு பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற, பல்வேறு இன மக்கள் வாழ்ந்தாலும் அங்கு மிகச் சரியான விதத்திலே அதிகாரங்கள் பகிர்ந்துகொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக காணி, பொலிஸ் உள்ளிட்ட பல்வேறு முக்கிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

எனவே பாரதத்தில் வாழ்கின்ற வெவ்வேறு மொழிகளைப் பேசுகின்ற, வெவ்வேறு இன மக்கள் தமக்கான பூரண அதிகாரங்களுடன் அவர்களுடைய மாநிலங்களில், அவர்களுக்குரித்தான கலை, கலாச்சார, பண்பாட்டு, வாழ்வியல் அம்சங்களுடன் மிகவும் மகிழ்ச்சியாக வாழ முடிகின்றது.

இத்தகைய அதிகாரப் பகிர்வால்தான் அவர்கள் இந்தியர்களாக ஒருமித்து ஒற்றுமையாக வாழ முடிகின்றது.

அத்தகைய ஒற்றுமையால்தான் பொருளாதார நிலையிலும், அறிவியல்,விஞ்ஞானம், படைக்கட்டுமானம், விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் இந்தியா தற்போது மேம்பட்டு நிற்கின்றது.

இவ்வாறு இந்தியாவில் மாநிலங்களுக்கு முழுமையாக அதிகாரங்கள் பகிரப்பட்டிருப்பதைப்போல், இங்கு இலங்கையிலும் மாகாணங்களுக்கு முழுமையான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளனவா?

அவ்வாறு அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்படும் எண்ணங்கள் உரியவர்களுக்கு ஏற்படாதவரையில், நாட்டுக்காக ஒன்றுபடும் எண்ணம் இனங்களுக்கிடையில் எவ்வாறு ஏற்படும்?

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ், சிங்களம்என இருவேறு மொழிகளைப் பேசுகின்ற மக்கள் வாழ்கின்றனர்.

இவ்வாறு இருமொழிகளைப் பேசுகின்ற மக்கள் இந்த நாட்டில் வாழ்கின்றார்கள், சகலருக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்ற எண்ணம் ஆட்சியாளர்களுக்கும், பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் வரும்போதுதான், பாரதியார் தனது பாடல்வரிகளில் குறிப்பிட்டிருப்பதைப் போல இந்தநாடு இரு மொழ. பேசுகின்ற மக்கள் கூட்டத்தைக் கொண்டிருந்தாலும் இந்தநாட்டின் உயிரும், சிந்தனையும் ஒன்றாக இருக்கும்.

அரசதலைவர் முதலில் இந்த நாட்டில் சிறுபான்மையாக வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் முழுமையாக ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் அர்த்தமுள்ள அதிகாரப. பகிர்வை வழங்கவேண்டும்.

தமிழ்ப் பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய காணி, பொலிஸ் உள்ளிட்ட முக்கிய அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

அவ்வாறு இந்தநாட்டில் அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின். போதுதான் நாட்டுமக்களிடையே ஐக்கியத்தைப் பேணமுடியும்.

எனவே மாற்றமென்பது இங்கு வாழ்கின்ற தமிழ்பேசும் சிறுபான்மை மக்களின் மனங்களிலிருந்து வரவேண்டியதல்ல. இங்குள்ள பெரும்பான்மையின மக்களிடமிருந்தும், ஆட்சியாளர்களிடமிருந்துமே நாம் மாற்றங்களை எதிர்பார்க்கவேண்டியிருக்கின்றது.

தமிழ்ப் பேசும் மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கக்கூடாது என்கிற குறுகிய மனப்பாங்கிலிருந்து முதலில் ஆட்சியாளர்களும், பெரும்பான்மையினத்தவர்களும் மாறவேண்டும்.

அத்தகைய மாறுதல்தான் இந்தநாட்டில் இன ஐக்கியத்தை ஏற்படுத்தி, இந்த நாட்டில் பொருளாதாரத்தை முன்னேற்ற வழிவகுக்கும்.

அரசததலைவர் ரணில் விக்கிரமசிங்க தற்போது பாரதியார் பாடலைப் பாடுகின்றார் என்பது முக்கியமல்ல, இதைவிட எம்மாலும் மிகச்சிறப்பாக பாரதியார் பாடல்களைப் பாடிக்காட்டமுடியும்.

ஆகவே அரசதலைவர் ரணில் பாரததேசத்தில் இருப்பதைப்போன்று இலங்கையிலும் அதிகாரங்களைப் பரவலாக்க முன்வரவேண்டும். அதுவே மிகமுக்கியமானதாகும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தொடர்ச்சியாக தமிழ்ப் பேசும் சிறுபான்மைச் சமூகத்திற்கு முழுமையான அதிகாரப்பகிர்வை வழங்குவதற்கு எந்த ஆட்சியாளர்களும் முன்வரவில்லை. தொடர்ந்து மாறி மாறி வருகின்ற ஆட்சியாளர்கள் தமிழ்ப் பேசும் சிறுபான்மைச் சமூகத்திற்குத் துரோகமிழைத்து வருகின்ற வரலாற்றையே காண்கின்றோம்.

அத்தகைய அரசியலைத் தொடர்ந்தும் முன்னெடுத்து, தமிழ்ப் பேசும் மக்களுக்கு அரசதலைவர் ரணில் துரோகமிழைக்கப்போகின்றாரா, அல்லது பாரதியாரின் பாடல் வரிகளுக்கு செயல் வடிவம் கொடுக்கப்போகின்றாரா என்பதை அவரே தீர்மானிக்கவேண்டும்.

வெறுமனே வார்த்தைகளால் ஒற்றுமைக்கான அழைப்பை விடுப்பதன்மூலம் இந்தநாட்டில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டுவிடாது – என்றார்.



# சாவல்கட்டு மீனவர்கள் கோரிக்கை; நடவடிக்கை எடுக்க ஆளுநர் உறுதி

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை சாவல்கட்டு கிராம மீனவர் சங்கத்தின் பிரதிநிதிகள் சிலர், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுச் சந்தித்து தங்களின் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

காக்கைத்தீவுக் கடற்கரையில் தங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியைத் துப்புரவு செய்து கொள்வதற்கும், மீன்பிடி துறையை மேம்படுத்திக் கொள்வதற்கும் உரிய அனுமதிகளைப் பெற்றுக் கொடுக்குமாறு கோரிக்கைகளை ஆளுநரிடம் அவர்கள் முன்வைத்தனர்.

அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் கூறினார்.



அத்துடன் மீன்பிடித் துறையைத் துப்புரவு செய்வதற்கான தற்காலிக அனுமதியைப் பெற்றுக் கொடுப்பார் எனவும், உள்ளூராட்சி மன்றத்தினூடாக மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளை உரிய வகையில் முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பார் எனவும் ஆளுநர் தெரிவித்தார். மேலும் அயல் கிராமங்களுடன் சினேகபூர்வமாகச் செயற்பட்டு, ஒன்றிணைந்த அழைப்பை விடுக்கும் பட்சத்தில் நேரடியாகக் களத்திற்கு வருகை தரவும் தாம் தயாராக உள்ளார் என ஆளுநர் மேற்படி மீனவர் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

# 1,200 போதை மாத்திரைகளுடன் நானாட்டானில் இருவர் கைது!

(ந.லோகதயாளன்)

மன்னார் நானாட்டான் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து இருநூறு போதை மாத்திரைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டவை என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இவற்றை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப் போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



# பாண் எடை தொடர்பான விசேட சுற்றி வளைப்பு!!

## மட்டக்களப்பில் மும்முரம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாண் எடை தொடர்பான விசேட சுற்றி வளைப்புக்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையினால் கடந்த முதலாம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க விற்பனைக்காக தயாரிக்கப்படும் பாண்களின் நிறை குறித்து வர்த்தக நிலையங்களைப் பரிசோதனை செய்யும் நடவடிக்கைகள் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்திலும் மட்டக்களப்பு நகர், காத்தான்குடி, ஆரையம்பதி, ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி ஆகிய நகர்ப் பிரதேசங்களில் இயங்கும் ஹோட்டல்கள் மற்றும் வெதுப்பகங்களில் பாண்களின் எடை தொடர்பான சுற்றிவளைப்புக்கள் மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டன அதன் மாவட்டப் பொறுப்பதிகாரி என்.எம்.சப்ராஸ் தெரிவித்தார்.

பெப்ரவரி 5ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 4.00 மணி வரை 30இற்கும் மேற்பட்ட ஹோட்டல்கள் மற்றும் வெதுப்பகங்கள் பரிசோதனை செய்யப்பட்டன. குறைந்த நிறையில் பாண்களை விற்பனை செய்த 11 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாண்களின் விலைகளை வெளிப்படுத்தாமை, முறையான லேபல் இடப்படாமை போன்ற குற்றங்களுக்காக 05 பாண் விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய ஓர் இறாத்தல் பாண் 450கிராம் காணப்பட வேண்டும். அவசியமாயின் 13.5கிராம் நிறைக் குறைவிற்கும் அரை இறாத்தல் பாண் (225கிராம்) 9 கிராம் எடைக் குறைவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பொதி செய்யப்பட்ட, சேமித்து வைக்கப்பட்ட, விற்பனைக்கு வழங்கப்படும், விற்பனைக்காகக் காட்டப்படும் அல்லது சில்லறை அல்லது மொத்தமாக விற்கப்படும் தயாரிக்கப்பட்ட எந்த வகைப் பாணும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான எடையைக் கொண்டிருக்க வேண்டும் எனப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அறிவித்துள்ளது.

விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள பாணின் எடையைக் காட்சிப்படுத்துமாறு அனைத்து வர்த்தகர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் எதிர்காலத்தில் இச்சுற்றி வளைப்புக்கள் தொடர்ந்தும் இடம்பெறவுள்ளன என மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அதிகார சபை மேலும் தெரிவித்தது.








# மத்திய வங்கியால் வணிக வங்கிகளுக்கு வழங்கப்படும் குறுகிய காலக் கடன்களுக்கான கட்டுப்பாடுகள் தளர்வு

இலங்கை மத்திய வங்கியினால், வணிக வங்கிகளுக்கு குறுகிய கால கடன்களை வழங்குவதற்கு அமுல்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்பட்டுள்ளன.

பெப்ரவரி 16 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாணயக் கொள்கை சபை நேற்று முன்தினம் கூடிய போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால், கடந்த வருடம் ஜனவரி 16 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில், வணிக வங்கிகளுக்கு குறுகிய கால கடன்களை வழங்குவதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் குறித்த கட்டுப்பாடுகளை தளர்த்துவதன் மூலம், சந்தையில் வட்டி வீதம் வீழ்ச்சியடையும் வேகம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.



## 37 கோடி ரூபா மதிப்புள்ள 2 மாணிக்கக்கற்கள் மீட்பு

### தேரர் உள்ளிட்ட இருவர் கைது

கொஸ்லந்த பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 37 கோடி ரூபா மதிப்புள்ள இரு மாணிக்கக்கற்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இராணுவ புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலுக்கமைய, இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யப்படவிருந்த 2 நீல மாணிக்கக்கற்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் மதிப்பு 37 கோடி ரூபா என இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் வெலிவேரி பிரதேசத்தின் தேரர் ஒருவர் உட்பட இருவர் கொஸ்லந்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்லந்த பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி பணி இடைநிறுத்தம்




கொழும்பு – ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி உள்ளிட்ட மூவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களின் உடலில் விஷம் பரவிய சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு, அவர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸ் அதிகாரிகளால் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மேற்படி சிறைக்கைதிகளை பார்வையிடுவதற்கு பொலிஸ் நிலையத்திற்கு வந்த ஒருவர் வழங்கிய பால் பக்கெட்டை பருகிய பின்னர் அவர்கள் சிறைக்கூடத்திற்குள் வீழ்ந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, அவர்கள் பணியிடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

விஷம் உடலில் பரவியமையினால், அவர்கள் இருவரும் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



# இந்து சமுத்திர மாநாட்டின் பிரதான உரையை ஆஸியில் நிகழ்த்துகின்றார் ஜனாதிபதி ரணில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை ஆஸ்திரேலியா விற்குப் பயணமானார்.

அவர் ஆஸ்திரேலியாவில் நடை பெறும் ஏழாவது இந்து சமுத்திர மாநாட் டில் பங்கேற்கவுள்ளார்.

இந்தியா மன்றம் மற்றும் ஆஸ் திரேலிய அரசாங்கத்தின் அழைப் பின் பேரில் இந்த மாநாட்டில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

இந்து சமுத்திர மாநாட்டில் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க பிரதான உரை நிகழ்த்தவுள்ளார்.

ஏழாவது இந்து சமுத்திர மாநாடு இன்றும், நாளையும் ஆஸ்திரே லியாவின் பேர்த் நகரில் நடைபெற வுள்ளது.

இந்து சமுத்திரத்தை அண்மித்த நாடுகள் மற்றும் இந்து சமுத்திரத்தை அதிகமாக பயன்படுத்தும் ஏனைய நாடுகளை பாதிக்கும் பொதுவான விடயங்கள் தொடர்பில் இந்த மாநாட் டில் ஆராயப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக் கப்பட்ட இந்த மாநாடு இம்முறை, "நிரந்தரமான மற்றும் நிலையான இந்து சமுத்திரத்தை நோக்கி" என்ற தொனிப்பொருளில் நடைபெறுகின் றது.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஒத் துழைப்பை மேம்படுத்தும் நோக்கத் துடன் 40 நாடுகளை சேர்ந்தவர்க ளின் பங்கேற்புடன் வரைபடமொன்று தயாரிக்கும் நடவடிக்கையும் இம் முறை மாநாட்டில் முன்னெடுக்கப்பட வுள்ளது.



# மாலைதீவு பாதுகாப்பு படை பிரதானி இலங்கைக்கு வருகை தந்துள்ளார்

மாலைதீவுகளின் பாதுகாப்பு படை பிரதானி லெப்டினன்ட் ஜெனரல் அப்துல் ரஹீம் அப்துல் லத்தீப் இலங்கச்சிக்கு வருகை தந்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்னவை அவர் சந்தித்துள்ளார் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், இராணுவத் தளபதியை யும் அவர் சந்தித்துள்ளார் எனப் பாது காப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பாதுகாப்புச் சேவை கட்டளைகள் மற்றும் ஊழியர்கள் கல்லூரியின் அழைப்பிற்கிணங்க, மாலைதீவுகளின் பாதுகாப்பு படைபிரதானி நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

அவர் இலங்கையின் பாதுகாப்பு சேவை கட்டளைகள் மற்றும் ஊழி யர்கள் கல்லூரியில் பட்டமொன் றையும் பெற்றுள்ளார் என்பது விசேட அம்சமாகும்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.02.2024

## மேஷம்

இன்று உங்களிடம் நம்பிக்கையும் உறுதியும் நிறைந்து காணப்படும். இதனால் உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடச் சூழல் பணியின் செயல்திறனில் உங்கள் திறமையை நிரூபிக்க சாதகமாக இருக்கும்.உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி பொங்கும்.

இன்று உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கு சாதகமான நாள். பணப்புழக்கம் அதிகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.

## ரிஷபம்

இன்று சில மாற்றங்கள் காணப்படும். அதற்கு தக்கவாறு நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் பேசும்போது உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. யோகா மற்றும் தியானம் அனைத்து விதத்திலும் உங்களுக்கு நற்பயன் அளிக்கும்.

கடின உழைப்பின் மூலம் வெற்றி கிடைக்கும். என்றாலும் நற்பயன் கிடைக்க நீங்கள் திட்டமிட்டு செயல்பட வேண்டும். உங்களின் புதுமையான கருத்துக்கள் மூலம் உங்கள் படைப்புத்திறன் பிரகாசிக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைத்துக்கொள்ள நீங்கள் சமநிலையோடு நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

## மிதுனம்

நீங்கள் இன்று எதிர்படும் சவால்களை விவேகத்துடனும் உறுதியுடனும் கையாள வேண்டும். உற்சாகமான நேர்மறையான போக்கை மேற்கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்காது. பணிச் சுமை காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணியில் சிறந்த பலனைக் காண உங்கள் பணிகளை ஒழுங்காக திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

நீங்கள் லேசான விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். நகைச்சுவையான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பணப்பற்றாக்குறை காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் தேவைகளை சந்திக்க போதிய பணம் கையில் இருக்காது.

## கடகம்

இன்று மிகவும் பரபரப்பாக காணப்படுவீர்கள். இன்று உங்களின் எளிமையான திட்டமிட்ட அணுகுமுறை மூலம் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும். உறுதி மற்றும் தைரியம் மூலம் உயர்வான வெற்றியை அடைவீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக முடிப்பீர்கள். பணியின் மீதான உங்கள் அர்ப்பணிப்பு நன்மை பெற்றுத் தரும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்களின் இந்தப் போக்கின் காரணமாக இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் சேமிப்பு கணிசமாக அதிகரிக்கும். இன்று அதிக பணம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்களிடம் காணப்படும் நேர்மறையான ஆற்றல் காரணமாக நீங்கள் ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

## சிம்மம்

இன்று உங்கள் எதிர்காலம் பற்றிய அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். உங்கள் இலக்கை நோக்கி முயற்சி எடுப்பீர்கள். உணர்ச்சிவசப்படாதீர்கள். அது உங்களுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தித் தரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களுடனான உறவை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடனான பிரச்சினை என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாடான அணுகு முறையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

இன்று போதிய அளவு பண வரவு இருக்காது. ஏற்றத் தாழ்வு காரணமாக நிதியில் ஸ்திரத்தன்மை சாத்தியம் இல்லை.

## கன்னி

இன்று சில பதட்டமான சூழ்நிலை காணப்படும். அதிலேயே அதிக நேரம் கழியும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம்.

பணிகளின் இயல்பு கடினமாக இருப்பதன்காரனமாய்நீங்கள்பணிகளைகுறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் ஏற்பட இத்தகைய போக்கை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் பராமரிப்பிற்காக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும். தேவையற்ற வகையில் பணம் இழக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

## துலாம்

இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. இன்று அவநம்பிக்கையும் பதட்டமும் காணப்படும். இசை கேட்பது அல்லது புத்தகம் படிப்பது போன்ற நிகழ்ச்சிகள் மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று பணிச்சுமை அதிகரித்துக் கொண்டே இருக்கும். உங்கள் பணிகளை இன்று எளிதாக முடிக்கும் நிலை காணப்படாது.

உங்கள் மனதில் ஏற்படும் குழப்பமான எண்ணங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது நல்லது.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். அதனை சமாளிப்பது இயலாத நிலையாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தலை வலி வர அதிக வாய்ப்பு உள்ளது.

## விருச்சிகம்

இன்று மிகவும் வெற்றிகரமான நாளாக இருக்கும். நீங்கள் உங்கள் செயல்களை எளிதாகவும் மகிழ்ச்சியாகவும் மேற்கொள்வீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் இலக்குகளை எளிதாக அடைவீர்கள். அனைத்து விதத்திலும் வளர்ச்சி காணப்படும்.

பணியிடத்தில் நீங்கள் சிறப்பாகவும் தன்னிச்சையாகவும் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் உணர்வுகளை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். வங்கியில் கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.02.2024

## தனுசு

இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். இசை கேட்பது அல்லது திரைப்படம் பார்ப்பது போன்ற நிகழ்சிகள் மூலம் மனதை திசை திருப்பி ஆறுதல் பெறலாம்.

நீங்கள் பொறுமையின்றி செயல் படுவதை விட புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். உங்கள் பணிகளை திறமையாக மேற் கொள்ள இது அவசியம்.

உங்கள் துணையிடம்உணர்ச்சி வசப்பட்ட மன நிலையை வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண் டும்.

இன்று பண இழப்பு காணப்படும். கையிலிருக்கும் பணத்தைக் கொண்டு சமாளிப்பதை கடினமாக உணர் வீர்கள்.

## கும்பம்

இன்று விருப்பமான பலன் காண சாதகமான நாள் அல்ல. நீங்கள் உங்கள் முன்னேற்றம் குறித்து கவலைப் படு வீர்கள். எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் பாதையில்வரும் தடைகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள்.

பணியிடத்தில் கடினமான சூழல் காணப்படும். நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். பணி களை நம்பிக்கையுடன் கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இயலாது. உங்கள் நண்பர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நீங்கள் தவறான முறையில் நடந்து கொள்வீர்கள்.

நிதி நிலைமை ஸ்திரத்தன்மை யின்றி காணப்படும். சேமிப்பதற்கும் குறைந்த வாய்ப்பே காணப்படும்.

## மகரம்

இன்று அனைத்து செயல்களிலும் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைப் பது கடினமாக உணர்வீர்கள். நீங்கள் பதற்றத்துக்கு ஆளாவீர்கள்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத் தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் பணிகளை முடிப்பதில் தாமதம் காணப்படும்.

சில தவறான புரிந்துணர்வின் காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்படும்.

இன்று குடும்பத்தின் நலனுக்காக தேவையற்ற செலவுகள் காணப்படும். அதிக செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. கால் வலியால் பாதிக்கப்படலாம். இது உங்களுக்குச் சற்றுக் கவலையை அளிக்கும்.

## மீனம்

இன்று சிறந்த வளர்ச்சி காணப்படும். ஆன்மீக ஈடுபாடு சிறந்த ஆறுதல் தரும். நீங்கள் விரைவில் புனித யாத்திரை மேற்கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

பணியைப் பொறுத்தவரை நல்ல பல னடைவீர்கள். உங்கள் கடின உழைப்புக்குப் பாராட்டும் அங்கீகாரமும் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனைந்து வீட்டில் நடை பெறவிருக்கும் சுப நிகழ்ச்சி குறித்த திட்டங்களை திட்டு வீர்கள். இதனால் உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி கிட்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறிது பணம் இழக்க நேரலாம்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் திடமான ஆரோக்கியத்தை பரா மரிப்பீர்கள்.

